No. of Printed Pages : **4**

**6691**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# Part III — Vocational Subjects

# வேளாண் அறிவியல்

# AGRICULTURAL SCIENCE

( தமிழ் வழி / Tamil Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **மாற்று** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** பயிர் உற்பத்தியில் _________ முக்கிய இடுபொருளாகும்.

(அ) காற்று (ஆ) மண் (இ) தரமான விதை (ஈ) நீர்

**2.** நிலக்கடலை பயிரில் விதையில்லா காய்கள் உருவாகுவதைத் தடுக்க _________ சத்தை இட வேண்டும்.

(அ) கந்தகம் (ஆ) யூரியா

(இ) போராக்ஸ் (ஈ) இரும்பு சல்பேட்

**3.** முந்திரி அடர் நடவுக்கான இடைவெளி _________மீ.

(அ) $5 \times 3$ (ஆ) $5 \times 5$ (இ) $4 \times 5$ (ஈ) $5 \times 4$

[ திருப்புக

https://www.tamilnaduboard.com

**4.** எளிதில் கரையாத நிலையில் உள்ள ஊட்டச்சத்து :
(அ) Cl (ஆ) P (இ) Al (ஈ) N

**5.** நெல் குருத்துப் பூச்சியைக் கட்டுப்படுத்தும் முட்டை ஒட்டுண்ணி :
(அ) ஐசோடிமா (ஆ) பிரகானிட்
(இ) தத்துப் பூச்சி (ஈ) டிரைகோகிரம்மா

**6.** ஒருங்கிணைந்த பண்ணையத்தின் மிக முக்கிய அங்கம் :
(அ) ஆடு வளர்ப்பு (ஆ) பயிர் சாகுபடி
(இ) மீன் வளர்ப்பு (ஈ) கறவைமாடு வளர்ப்பு

**7.** விதை உற்பத்தி செய்யும் போது மலர்களில் உள்ள ஆண் பாகத்தை நீக்குதலுக்கு ________ என்று பெயர்.
(அ) உறையிடுதல் (ஆ) ஈமேஸ்குலேஷன்
(இ) கலவன் நீக்குதல் (ஈ) கருவுறுதல்

**8.** வேளாண்மையில் இரசாயனங்கள் பயன்பாட்டிற்கு வந்த காலகட்டம் :
(அ) 18 -ம் நூற்றாண்டு (ஆ) 16 -ம் நூற்றாண்டு
(இ) 19 -ம் நூற்றாண்டு (ஈ) 17 -ம் நூற்றாண்டு

**9.** இராணித் தேனீயின் ஆயுட்காலம் :
(அ) 4 ஆண்டுகள் (ஆ) 2 ஆண்டுகள்
(இ) 5 ஆண்டுகள் (ஈ) 3 ஆண்டுகள்

**10.** பூந்தோட்டத்தில் உள்ள மரத் தொகுப்பு :
(அ) செரிகல்சர் (ஆ) ஏபிகல்சர்
(இ) டிராபி (ஈ) ஆர்பரேட்டம்

**11.** சைவ உணவுகளுக்கு ________ நிறக் குறியீடு இடப்படுகிறது.
(அ) மஞ்சள் (ஆ) பழுப்பு (இ) பச்சை (ஈ) நீலம்

**12.** மீன்களுக்கு அழுத்தம் மற்றும் பாதிப்பினை ஏற்படுத்துபவை :
(அ) பூசணம் (ஆ) பாக்டீரியா
(இ) தரம் குறைந்த நீர் (ஈ) நச்சுயிரி

**13.** தொலை உணர்வு செயற்கைக் கோள்களில் ஒளிக்கதிர்களை உணர்ந்து படிமங்களாக மாற்ற உதவுவது :
(அ) உணர்விகள் (ஆ) செயலி
(இ) சோலார் பலகைகள் (ஈ) தரவுத் தளங்கள்

https://www.tamilnaduboard.com

**14.** களைகளை எரித்து அதை நிலத்தில் தூவுவதற்கு ________ என்று பெயர்.

(அ) தூவுதல் (ஆ) சாம்பல் சத்து

(இ) டாப்பிங் (ஈ) பெப்பரிங்

**15.** பயிர்களின் வளர்ச்சிப் பருவங்களில் அளிக்கப்படுகின்ற உரத்திற்கு ________ என்று பெயர்.

(அ) உயிர் உரம் (ஆ) அடி உரம் (இ) இயற்கை உரம் (ஈ) மேலுரம்

## பகுதி - II

குறிப்பு : **எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **10x3=30**

**16.** விதை அளவை கணக்கிடுவதற்கான சூத்திரத்தை எழுதுக.

**17.** நிலக்கடலையின் பொருளாதார முக்கியத்துவங்கள் யாவை ?

**18.** தக்காளி பயிருக்கு வளர்ப்பு ஊடகம் தயார் செய்ய தேவைப்படும் பொருட்கள் யாவை ?

**19.** பயிர் பாதுகாப்பின் அடிப்படை கொள்கைகள் யாவை ?

**20.** ஒருங்கிணைந்த பண்ணையம் என்றால் என்ன ?

**21.** மேம்படுத்தப்பட்ட விதைகளின் வகைகள் மூன்றைக் குறிப்பிடுக.

**22.** இயற்கை வேளாண்மை – வரையறுக்கவும்.

**23.** நாற்று, நாற்றங்கால் – வரையறுக்கவும்.

**24.** பட்டுப்புழுக்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை எழுதுக.

**25.** கலப்படம் என்றால் என்ன ?

**26.** ராணிக்கெட் நோய் பற்றி எழுதுக.

**27.** தொலை உணர்வியல் என்றால் என்ன ?

**28.** எவையேனும் மூன்று நுண்ணுயிர் உரங்களின் பெயர்களை குறிப்பிடுக.

[ திருப்புக

https://www.tamilnaduboard.com

## பகுதி - III

குறிப்பு : **எவையேனும் 5** வினாக்களுக்கு விடை அளிக்கவும். வினா எண் **35 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **5x5=25**

**29.** விதை நேர்த்தி என்றால் என்ன ? அதன் பயன்கள் யாவை ?

**30.** நிலக்கடலையில் ஏன் ஜிப்சம் இடவேண்டும் ?

**31.** குறிப்பு வரைக :

(i) வயிற்று விஷம்

(ii) ஆவி விஷம்

**32.** ஒருங்கிணைந்த பண்ணையத்தில் நன்செய் நிலத்திற்கான மாதிரி திட்டத்தினை விளக்குக.

**33.** கலவன் நீக்குதல் என்றால் என்ன ? விவரிக்கவும்.

**34.** தேனின் பயன்களை எழுதுக.

**35.** கலப்பைக் கிழங்கின் அறுவடை மற்றும் மகசூல் பற்றி எழுதுக.

## பகுதி - IV

குறிப்பு : கீழ்கண்ட வினாக்களுக்கு **இரண்டு பக்க அளவில்** விடையளிக்கவும். **2x10=20**

**36.** (அ) தென்னையில் குரும்பை உதிர்தல் ஏன் ஏற்படுகிறது ? அதை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் ?

**அல்லது**

(ஆ) மல்லிகை சாகுபடி செய்யும் முறையை விவரிக்கவும்.

**37.** (அ) பயிர் சாகுபடியில் உனக்குத் தெரிந்த பயிர் பாதுகாப்பு முறைகளை எழுதுக.

**அல்லது**

(ஆ) உனக்குத் தெரிந்த ஊடு சாகுபடி முறைகளைப் பற்றி விவரிக்கவும்.

- o O o -

https://www.tamilnaduboard.com